## ஒதுக்கீட்டுத் தலைப்பு – 182 – வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

---

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்டோபர் 25 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல்

மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

அமைச்சால் 2013 மே 03 ஆம் திகதி 18201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | கடன் மற்றும் முற்பணங்கள் தொடர்பான கடன்பட்டோர் மீதி | 1994 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை |
| (ii) | கடன் மற்றும் முற்பணங்கள் தொடர்பான கடன்கொடுத்தோர் பதிவேடு | - மேற்படி - |
| (iii) | முற்பணக் கணக்குகள் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கு | - மேற்படி - |

## (இ) ஓதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 394,175,000 ஆனதுடன் ஆண்டின் அதில் இறுதியில் ரூபா 99,047,048 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்பு ரூபா 295,127,952 தொகையாகியிருந்ததுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் 75 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் தேறிய சேமிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழுபவை | 82,175,000 | 84,175,000 | 14,104,480 | 17 |
| மூலதனம் | 310,000,000 | 310,000,000 | 281,023,472 | 91 |
| கூட்டுத்தொகை | 392,175,000 | 394,175,000 | 295,127,952 | 75 |

### (ii) பாதீட்டு முரண்கள்

- 08 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 255,825,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிப்பாக இருந்தது.

- 12 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 52 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான சேமிப்புகள் இருந்தது.

- ஒரு செலவின விடயம் ரூபா 9 மில்லியன் தொகையான முழு மதிப்பீட்டு ஏற்பாடும் நி.பி. 66 இன் மூலம் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

18201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான மீதிகளும் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,700,000 | 1,699,933 | 900,000 | 2,155,689 | 7,000,000 | 5,202,715 |

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 18201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 307,085 ஆகக் காணப்பட்டதுடன் இந் நிலுவையாகவருந்த மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 1.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்ததிட்டம் அமைச்சால் ஆண்டின் ஆரம்பத்தில்

தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று 2012 திசெம்பர் 31 வரையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்தல்

அமைச்சால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைவான காலத்திலிருந்து நிலவிவரும் பொறுப்புகள் ரூபா 6,247,787 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் உள்ளடக்கப்பட்ட விமானப் பயணச்சீட்டுகளும் வாடகை வாகனத்திற்கான செலவினமும் முறையே ரூபா 2,251,068 ஆகவும் ரூபா 3,580,874 ஆகவும் காணப்பட்டதுடன் அப் பொறுப்புகள் தீர்க்கப்படும் நிலை திருப்திகரமற்றதாகக் காணப்பட்டது.

## 1.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நி.பி. 115(2) | 61,764 | முன்னைய ஆண்டிற்குரிய 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்கு ரூபா 61,764 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்காக நி.பி. 155(3) இன் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி. 245(i) | 3,073,742 | கொடுப்பனவு சான்றுபடுத்தப்படாமல் 11 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (iii) நி.பி. 396 (ஈ) | 8,650 | 2012 திசெம்பர் மாதம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட எனினும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்கள் காலங்கடந்த 02 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) நி.பி. 1646 | - | அமைச்சிற்கு உரித்தான வாகனங்களில் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தபொழிப்பு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | |
| | 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை 4:2 ஆம் பந்தி | - சுற்றறிக்கைக்கு முரணாக, அமைச்சரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்காக மாதாந்தம் ரூபா 200,000 தொகையான கூப்பனகளில் எரிபொருள் வழங்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் மாதங்களுக்காகவும் எரிபொருள் கூப்பன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் 201 மற்றும் 3.4 ஆம் பந்திகளின் பிரகாரம் அமைச்சரின் பதவியணியின் ஒருங்கிணைப்புச் செயலாளருக்கும் ஊடகச் செயலாளருக்கும் அரசாங்க நிதிகளிலிருந்து வாகன வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு முரணாக, மேலதிக ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு முறையே ரூபா 837,576 தொகையும் ரூபா 1,345,840 தொகையுமான மாதாந்த வாடகைக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடாக வாடகை அடிப்படையில் வாகனம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சினால அமைச்சின் ஊடகச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ

வாகனம் ஒன்றிற்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலமும் வாடகை வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. இதற்காக 2012 சனவரி மாதம் முதல் 2012 செப்தெம்பர் 02 ஆம் திகதி வரையான காலத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூபா 51,975 தொகையும் 2012 செப்தெம்பர் 03 ஆம் திகதி முதல் ஒரு மாதத்திற்கு ரூபா 70,000 படியும் வாகனம் வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் மேலதிகப் பயணத்திற்காக பயணித்த தூரத்திற்காக ரூபா 660,800 தொகையும் அக் காலத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 1.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 07 | 05 | 02 |
| மூன்றாம் மட்டம் | 01 | - | 01 |
| இரண்டாம் மட்டம் | 1,209 | 25 | 1,184 |
| ஆரம்ப மட்டம் | 26 | 20 | 06 |
| ஏனையவை/தற்காலிகமானவை | 04 | 01 | 03 |
| மொத்தம் | 1,247 | 51 | 1196 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 1,196 ஊழிய வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.